O.S.220/2023

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.220/2023

வாதி தரப்பு 1வது சாட்சி முத்துமாணிக்கம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. முத்துமாணிக்கம் | வயது | : | 60/2025 |
| கணவர் பெயர் | : | சேகரன் | தாலுகா | : | ஆவுடையார்கோவில் |
| கிராமம் | : | பலவரசன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-19.03.2025

வா.சா.1

சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் விவசாயம் செய்து வந்தேன். அதன் மூலம் எனக்கு வருமானம் வந்தது. மேற்படி விவசாயத்தை தவிர எனக்கு வேறு வருமானம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

2) பிரதிவாதி டிரைவர் தொழில் செய்து தினக்கூலியாக வேலை செய்து வருகிறார் என்று சொன்னால் அது சரியல்ல. அவர் வண்டிகள் வாங்கி, விற்கும் தொழில் செய்வதாக சொன்னார்கள்.

3) கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்னர் நான் வழக்கு சொத்தை பார்த்தேனா என்று கேட்டால், பிரதிவாதியும் அவரது மனைவியும் என்னை அழைத்துச்சென்று சொத்தை காண்பித்தார்கள். நாங்கள் பார்த்தோம்.

4) நாங்கள் இடத்தைசென்று பார்த்தபோது இருந்த அந்த சொத்தின் சந்தை மதிப்பீடு தற்போது உயர்ந்திருக்கும் என்று சொன்னால், அந்த அளவிற்கு பெரிதாக உயரவில்லை.

5) கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு இன்றைய தேதி வரையில் அந்த சொத்தின் சந்தை மதிப்பை நான் அரசாங்கத்திடமிருந்து ஆவணம் மூலமாக வாங்கி பார்த்திருக்கிறேனா என்று கேட்டால் பார்க்கவில்லை.

6) பிரதிவாதி தனக்கு கடன் நிறைய இருப்பதாகவும் அதை அடைப்பதற்காகவும், அவரது மகனின் படிப்பிற்காகவும் மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் கண்ட தொகையை என்னிடம் வாங்கினார். அவ்வாறு பிரதிவாதிக்கு கடன் நிறைய இருப்பதாகவும், அதை அடைப்பதற்காகவும், அவரது மகனின்

படிப்பிற்காகவும் என்னிடம் மேற்படி தொகையை பிரதிவாதி வாங்கினார் என்று எனது வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி தராதபட்சத்தில் நான் கொடுத்த முன் பணத்தை திருப்பிதர பிரதிவாதிக்கு உத்தரவிடகோரி நான் எனது வழக்குரையில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை.

8) நான் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பிய பிறகு பிரதிவாதி சொத்து தொடர்பாக என்னை வந்து சந்திக்கவில்லை.

9) பிரதிவாதி அவரது அவசர தேவை நிமித்தமாகத்தான் என்னிடம் ரூ.15,00,000/- கடனாக வாங்கினார் என்றும், அவர் அவரது சொத்தை விற்பனை செய்யும் எண்ணத்தில் கிரைய ஒப்பந்தம் எதுவும் எனக்கு எழுதி கொடுக்கவில்லை என்று சொல்வது சரியல்ல.

10) பிரதிவாதி பலமுறை என்னிடம் நேரிலும், உறவினர்கள் மூலமும் மேற்படி ரூ.15,00,000/- த்தை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டு, ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுக்க கோரினார் என்றும், நான்தான் சொத்தின் சந்தை மதிப்பு அதிகமானதால் மேற்படி சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று கோரி மேற்படி தொகையை பிரதிவாதியிடமிருந்து வாங்க மறுத்துவிட்டேன் என்றும் சொல்வது சரியல்ல.

11) பிரதிவாதி அவர் வாங்கிய கடனை திருப்பி செலுத்த தயாராக இருந்ததால்தான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிற்கு அவர் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொல்வது சரியல்ல.

12) சொத்தின் சந்தை மதிப்பு அதிகமானதால் பிரதிவாதியிடமிருந்து கிரைய ஒப்பந்த சொத்தை அபலாபம் அடைய வேண்டும் என்ற காரணத்தினால் பிரதிவாதி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல செய்திருக்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

13) வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொல்வது சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.